# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வடமேல் மாகாண சபை**

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை பிரிவின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வெளிப்படையான போட்டிப் பரீட்சை - 2026**

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை பிரிவின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III பதவியில் நிலவும் 06 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் இலங்கைப் பிரஜைகளான ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2026 மே மாதத்தில் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை மத்திய நிலையமொன்றில் நடாத்தப்படும் என இத்தால் மூலம் அறிவிக்கப்படுகிறது.

*குறிப்பு:* ஏதேனும் ஒரு மதப் பிரிவில் துறவறம் பூண்டுள்ள எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை உடையவர் அல்லர்.

**01. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:**

1.1 கல்வித் தகைமைகள்

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம் மற்றும் கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் இரசாயனவியல், உயிரியலுடன் விவசாய விஞ்ஞானம் அல்லது பௌதிகவியல் ஆகிய அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

***குறிப்பு:* க.பொ.த. (சா./த.) தேர்வில் திறமைச் சித்தி பெற வேண்டிய மொழி மூலமானது இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலமே ஆகும்.**

1.2 தொழில்சார் தகைமைகள்

I. குண்டசாலை, அங்குணகொலபெலஸ்ஸ, பெல்வெஹெர, லபுதுவ, கரபிஞ்ச, வாரியபொல, பிபிலை, வவுனியா மற்றும் அநுராதபுரம் ஆகிய விவசாயக் கல்லூரிகளினால் வழங்கப்படும் இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

II. அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப (விவசாய) டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

III. அக்குவைனாஸ் கல்லூரியினால் வழங்கப்படும் இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

IV. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட இணைந்த நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

*குறிப்பு:*

1. இந்த ஆட்சேர்ப்பு நடைபெறும் நேரத்தில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய விவசாய கல்லூரிகள் மூலம் வழங்கப்படும் இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பது, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

**02. சம்பள அளவுத்திட்டம் :**

இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது 2025.01.01 ஆம் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் MN 3 – 2025 இற்கு அமைவாக ரூபா. 52,250 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 - ரூபா 100,040.00 ஆகும். (2027.01.01 ஆந் திகதி வரை அச்சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைவாக அதன் அட்டவணை III இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்.)

**03. ஏனைய தகைமைகள்:**

3.1 விண்ணப்பதாரிகள் சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

3.2 எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

3.3 விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்கின்ற இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர் வடமேல் மாகாணத்தில் கடந்த 03 வருடங்களாவது தொடர்ச்சியாக நிரந்தரமாக வசித்தவர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் (DS 04 கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்) மூலம் நேர்முகப் பரீட்சையின் போது வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடக் காலம் 03 வருடங்களுக்குக் குறைவாக உள்ள விண்ணப்பதாரர்களும், தமது வதிவிடக் காலத்தை DS 04 கிராம உத்தியோகத்தர் சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

3.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரரின் வடமேல் மாகாணத்திற்கான நிரந்தர வதிவிடக் காலம் கடந்த 03 வருடங்களுக்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில், விண்ணப்பதாரரின் துணைவர் (கணவன்/மனைவி) வடமேல் மாகாணத்தில் குறைந்தது 03 வருடங்களாவது நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருப்பின், அந்த விண்ணப்பதாரர்களும் மேலுள்ள 3.3 ஆம் பிரிவின்படி கருத்திற்கொள்ளப்படுவர். துணைவரின் வதிவிடச் சான்றிதழ் (DS 04 கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்) மற்றும் திருமணச் சான்றிதழ் ஆகியவற்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

3.5 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது, 18 இற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.

3.6 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சகல தகுதிகளையும் மற்றும் குறிப்பிட்ட வயது எல்லையையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே இப்பதவிக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர்களாகக் கருதப்படுவர்.

**04. சேவை நிபந்தனைகள் :**

4.1 இப்பதவி நிரந்தரமானதாகும். அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள ஓய்வூதியத் திட்டம் தொடர்பான கொள்கை முடிவுகளுக்கு இச்சேவை உட்பட்டதாக இருக்கும்.

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன், அத்தகுதிகாண் காலப்பகுதியில் தமது கடமை மற்றும் தகுதிகாண் காலப்பகுதியை திருப்திகரமான முறையில் பேணியிருத்தல், முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் சேவையை உறுதிப்படுத்துவதற்கான ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் தகுதிகாண் கால முடிவில் சேவை உறுதிப்படுத்தப்படும்.

4.3 அரசகரும மொழியொன்று அல்லாத மொழி மூலத்தில் சேவைக்கு இணைந்துள்ள உத்தியோகத்தரினால் குறித்த மொழித் தேர்ச்சியை தகுதிகாண் காலத்தினுள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

4.4 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதற்கு இடைநிகரான சுற்றறிக்கைகளுக்கமைய, சேவையில் இணைந்து 03 வருடங்களுக்குள் சேவையில் இணைந்த மொழி மூலத்திற்கு மேலதிகமாக ஏனைய அரசகரும மொழி/மொழிகளில் தேர்ச்சியினை உரிய மட்டத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4.5 தரம் III இல் 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் ஆங்கில மொழியில் க.பொ.த (சா.தர) மட்டத்தில் திறமைச் சித்தி மட்டத்திலான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.6 இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு/பதவியுயர்வு நடைமுறை ஒழுங்குவிதிகள் மற்றும் அதன்படி ஒப்படைக்கப்படும் பணிகளுக்கு மேலதிகமாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை ஒழுங்குவிதிகள், வடமேல் மாகாண நடைமுறை ஒழுங்குவிதிகள், வடமேல் மாகாண நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுக்காற்று விதிக்கோவை, திணைக்களக் கட்டளைகள், வடமேல் மாகாண சபை தொழில்நுட்ப சேவைப் பிரமாணம் மற்றும் அரசாங்கத்தினாலும் வடமேல் மாகாண சபையினாலும் வெளியிடப்பட்டுள்ள மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கு அமைவாக செயற்படுவதற்கு அனைத்து உத்தியோகத்தர்களும் கட்டுப்பட்டவர்களாவர்.

## 05. ஆட்சேர்ப்பு முறை :

5.1 வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அனைத்து வெற்றிடங்களுக்குமான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

5.2 எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களில், இரு பாடங்களினதும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசைப்படியே வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலானோரின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காகப் புள்ளிகள் எவையும் வழங்கப்படமாட்டாது என்பதுடன், கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் உள்ளிட்ட அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்தலும், உடல் தகுதியினைப் பரீட்சித்தலும் மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

## 06. எழுத்துப் பரீட்சை:

6.1 எழுத்துப் பரீட்சைக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய ஏதேனும் ஒரு மொழிமூலத்தில் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், விண்ணப்பித்த மொழிமூலத்தை பின்னர் மாற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

6.2 இப்பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது. விரிவான பரீட்சைப் பாடத்திட்டம் கீழே தரப்பட்டுள்ளது.

| *வினாப்பத்திரம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திக்குரிய புள்ளி அளவு* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பாடவிதானம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை (பல்தேர்வு வினாத்தாள்) | 01 மணித்தியாலம் | 100 | 40% |

**பாடத் திட்டம்**

நுண்ணறிவுத் தேர்வு

விண்ணப்பதாரரின் தர்க்கரீதியான சிந்தனை, பகுப்பாய்வுத் திறன், நேர முகாமைத்துவம் மற்றும் தீர்மானமெடுத்தல் ஆகியவற்றைப் பரீட்சிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும்.

பாடவிதானம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை

01. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்தின் பங்களிப்பு:
    (அ) மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாயத்தின் பங்களிப்பு.
    (ஆ) வேலைவாய்ப்பு
    (இ) விவசாயத்தின் ஏற்றுமதி இறக்குமதி நிலைமை

02. இலங்கையின் காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு.

03. மண் மற்றும் தாவரப் போசணை:

    (அ) மண்ணின் கட்டமைப்பு, நெய்தல், பௌதிக மற்றும் இரசாயன உவர்த்தன்மை மற்றும் பயிர்ச்செய்கையில் அவற்றின் தாக்கம்.
    (ஆ) தாவரப் போசணை, மண் / தாவரப் போசணை முகாமைத்துவம்.
    (இ) தாவரப் போசணை குறித்த விசேட குறிப்புகள்.

04. மண் இரசாயனம், மண் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகள்.

05. நீர்ப்பாசன முறைகள் மற்றும் நீர் முகாமைத்துவம்.
    (அ) பல்வேறு பயிர் வகைகளுக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறைகள் மற்றும் அவற்றின் நீர் முகாமைத்துவம்.
    (ஆ) நுண் நீர் முகாமைத்துவ முறைகள்.
    (இ) நீர் வடிந்தோட்டம் மற்றும் அதன் முக்கியத்துவம்.

06. பண்ணை இயந்திரமயமாக்கல்:
    (அ) பண்ணை இயந்திரமயமாக்கலின் நன்மைகள் மற்றும் தீமைகள்.
    (ஆ) நிலம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் விவசாய இயந்திர உபகரணங்கள்
    (இ) நீர்ப்பாசனம் மற்றும் தாவரப் பாதுகாப்பிற்கு பயன்படுத்தப்படும் விவசாய இயந்திர உபகரணங்கள்
    (ஈ). மேற்குறிப்பிட்ட இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.

07. விவசாய விரிவாக்கம்:
    (அ) விவசாய விரிவாக்க உத்திகள் மற்றும் வழிமுறைகள்.
    (ஆ) விவசாய விரிவாக்கத் தகவல் தொடர்பு முறைகள்.

08. திசு நட்டு வளர்ப்பு:
    (அ) திசு மாற்று வளர்ப்பின் அடிப்படைத் தத்துவங்கள் மற்றும் கடந்தகாலத் தகவல்கள் பற்றிய அறிவு.
    (ஆ) திசு வளர்ப்பின் பயன்பாடுகள் / பிரயோக உதாரணங்கள்.
    (இ) திசு வளர்ப்பின் நன்மைகள் மற்றும் தீமைகள்.

09. தாவரத் தடைக்காப்பு பற்றிய அறிவு:
    (அ) தாவரத் தடைக்காப்பு ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவு.
    (ஆ) தாவரத் தடைக்காப்பு முறைகள்.

10. தாவரப் பாதுகாப்பு / தாவரப் பேணல்:
    (அ) தாவரப் பாதுகாப்பின் முக்கியத்துவம் (தாவரம் / மரபணு முதலுரு).
    (ஆ) தாவரப் பாதுகாப்பு முறைகள் (தாவரம் / மரபணு முதலுரு).

11. மரபணுத் தொழில்நுட்பம்:
    (அ) DNA இன் முக்கியத்துவம்.
    (ஆ) மரபணு என்றால் என்ன, அதன் செயல்பாடு.
    (இ) DNA தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்.
    (ஈ) மரபணுப் பொறியியல் நுட்பங்கள் மூலம் தாவரங்களை மேம்படுத்துவதற்கான திறன்.

12. இலங்கையின் குடியேற்றத் திட்டங்கள் மற்றும் மகாவலித் திட்டம் பற்றிய அறிவு:
    (அ) குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள்.
    (ஆ) மகாவலித் திட்டத்திற்குச் சொந்தமான பிரதேசங்கள்.

13. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் தயாரித்தல் பற்றிய அறிவு.

14. வரைபடம் தொடர்பான விடயங்கள் பற்றிய அறிவு:
    (அ) அனிலோமானி, ரோட்ரேசர், டம்பி மட்டமானி, தியோடலைட்
    (ஆ) 1:50,000 – 1 : 10,000 அங்குல வரைபடங்கள் மற்றும் இறுதி கிராம வரைபடம் பற்றிய விபரங்கள்.

15. இலங்கையில் தற்போதுள்ள காணிகள் பற்றியும், அவை தொடர்பாக திணைக்களங்கள், நிறுவனங்கள் பற்றிய அறிவு:
    (அ) காணியின் வகைகள் - அரசாங்க காணிகள் / தனியார் காணிகள் / பரம்பரை காணிகள்

16. காணி அபிவிருத்தி மற்றும் பகிர்ந்தளிப்பு தொடர்பான அறிவு:
    (அ) தற்போது நடைமுறையிலுள்ள காணி அபிவிருத்தி மற்றும் பகிர்ந்தளிப்பு தொடர்பான தேசிய வேலைத்திட்டங்கள் பற்றிய புரிதல் மற்றும் காணியற்ற நபர்களை இனங்காணல்.
    (ஆ) பிம் சவிய வேலைத்திட்டம்
    (இ) ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வேலைத்திட்டம்

17. இராச்சிய காலத்திலிருந்து இன்றுவரை காணி உரித்துக்களை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் தொடர்பான அறிவு :
    (அ) அரச சாசனம், நிந்தகம்.
    (ஆ) குத்தகை ஆவணங்கள், சுவர்ண பூமி, ஜய பூமி, ரத்ன பூமி, ரன்பிம.

**07. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூபா. 1200.00 ஆன தொகை வடமேல் மாகாண சபையின் 2003-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்படும் வகையில் செலுத்தப்படல் வேண்டும். வடமேல் மாகாணத்திலுள்ள ஏதேனும் ஒரு பிரதேச செயலகத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட வ.மா.ச.ப.02 பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டிச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைத் தவிர வேறு எந்தவொரு பற்றுச்சீட்டுகளோ அல்லது காசுக்கட்டளைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் திருப்பி வழங்கப்படமாட்டாது என்பதுடன், அக் கட்டணத்தை வேறெந்தவொரு பரீட்சைக்காகவும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனித்திற் கொள்ளப்படல் வேண்டும். **(மேலதிக பயன்பாட்டிற்காக பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றினைத் தம்வசம் வைத்திருக்க வேண்டும்.)**

**08. விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

8.1 இவ்அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய, A4 அளவுடைய தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட

விண்ணப்பப்படிவங்களை 2026.05.18 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது தபால் கூரியர் சேவை மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

செயலாளர்,<br>
வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,<br>
வடமேல் மாகாண சபைகள் கட்டிடத் தொகுதி,<br>
குருநாகல்.

விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், **"குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III இற்குப் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026 "** எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

8.2 மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அமையாத அல்லது குறித்த திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத அல்லது தாமதமாகக் கிடைக்கின்ற அல்லது தெளிவற்ற மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்துவது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். விண்ணப்பப் படிவங்களைச் சரியாகப் பூரணப்படுத்தாமையினால் ஏற்படும் இழப்புகளை விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. (விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

*முக்கியம்* : விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது அவதானத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் தகவல்கள் எக்காரணம் கொண்டும் திருத்தம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

8.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.05.18 ஆந் திகதியாகும்.

**09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :**

விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பதவியொன்றில் வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா. 71,240.00 இற்கு கூடுதலான அடிப்படை வருடாந்த சம்பளம் பெறுகின்ற அரசின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**10. பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்தி/ பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருமாறு காட்டப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் சமர்ப்பிப்பது செல்லுபடியாகும்.

I. தேசிய அடையாள அட்டை<br>
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு<br>
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அதேவேளை, பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலும் முகத்தையும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்து கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் இரு காதுகளையும் மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அத்துடன் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகத்தையும் காதுகளையும் மறைக்காதவாறு வைத்திருத்தல் வேண்டும்.

குறிப்பு : பரீட்சை மண்டபத்தில் தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் பட்சத்தில், குறித்த விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

11. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை கால அட்டவணையின் பிரதியொன்றுடன் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவ்வாறு விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டவுடன், அது பற்றிய அறிவித்தலை வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக இணையத்தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தலொன்று வெளியிடப்படும். பரீட்சை நடைபெறும் தினத்திற்கு 03 நாட்களுக்கு முன்னர் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாவிட்டால், அது பற்றி வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவிடம் விசாரித்தல் வேண்டும்.

12. இப்பரீட்சையின் சட்டவிதிகளுக்கு ஏற்ப, எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஒரு தகவல் எவ்வகையிலேனும் உண்மைக்கு புறம்பானது எனக் கண்டறியப்படின், அவர் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டவராகக் கருதப்பட மாட்டார்.

13. விண்ணப்பம் கோரும் அறிவித்தல் தொடர்பான விடயங்கள் அல்லது அந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத அல்லது அந்த அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின், அது தொடர்பில் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

14. இப்பரீட்சையை நடாத்துதல், ஒத்திவைத்தல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்தியதன் பின்னர் தெரிவு செய்தல் / செய்யாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய,

என். எம். ஜே. பிரனாந்து,<br>
செயலாளர்,<br>
வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,